2020 மார்ச் 24] [திரு. எடப்பாடி கே. பழனிசாமி]

சீமை தந்த தீரம் மிக்க சுதந்திரப் போராட்ட வீரர் வெள்ளையத் தேவன். தூத்துக்குடி மாவட்டம், வல்லநாட்டில் அமைந்துள்ள அன்னாரின் மணிமண்டபத்தில், பொது மக்களின் கோரிக்கையை ஏற்று, முழுவுருவ வெண்கலச் சிலை அமைக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

2. பணிக் காலத்தில் பத்திரிகையாளர்கள் கடுமையான நோயினால் பாதிக்கப்பட்டு மருத்துவ சிகிச்சை மேற்கொள்ளும்போது, அவர்களுக்கு பத்திரிகையாளர் நல நிதியத்திலிருந்து வழங்கப்பட்ட மருத்துவ நிதி உதவி 50 ஆயிரம் ரூபாயிலிருந்து, ஒரு இலட்சம் ரூபாயாக 1–8–2018 அன்று முதல் உயர்த்தி வழங்கிட நான் ஆணையிட்டேன். இம்மருத்துவ நிதி உதவி 2 இலட்சம் ரூபாயாக தற்போது உயர்த்தி வழங்கப்படும்.

3. தூத்துக்குடி மக்களால் “மக்களின் தந்தை” எனப் போற்றப்படுபவரான ராவ் பகதூர் குரூஸ் பர்ணாந்தீஸ் அவர்களின் சேவையைப் போற்றும் வகையில், அவரது பிறந்த நாளான நவம்பர் 15 ஆம் நாள் அரசு விழாவாக ஆண்டுதோறும் கொண்டாடப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அச்சமயம் தூத்துக்குடி, பாளையங்கோட்டை சாலையில் உள்ள அன்னாரது சிலைக்கு, மாலை அணிவித்து, மரியாதை செலுத்தப்படும்.

(இ) திருவண்ணாமலை மாவட்டம், செய்யாறில் மருந்தியல் தொழிற்பூங்கா, சிப்காட் சிறுசேரியில் இயற்கைப் பூங்கா, சென்னைக்கு அருகில் மாநல்லூரில் மின்சார வாகனப் பூங்கா மற்றும் ஸ்ரீபெரும்புதூர் தரவு மையப் பூங்காக்கள் உருவாக்குதல் உள்ளிட்ட தொழில் துறை தொடர்பான முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழில் வளர்ச்சியில், தமிழ்நாடு மேலும் மேன்மை அடையும் வகையில், பின்வரும் அறிவிப்புகளை இந்த மாமன்றத்தில் வெளியிடுவதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன்:

1. திருவண்ணாமலை மாவட்டம், செய்யாறு தொழிற் பூங்காவில், முதற்கட்டமாக சுமார் 650 ஏக்கர் நிலப்பரப்பில் மருத்துவ மூலப் பொருட்கள் மற்றும் மருந்து உற்பத்தி நிறுவனங்கள் தொடங்குவதற்கு ஏதுவாக மருந்தியல் தொழிற்பூங்கா, சிப்காட் நிறுவனத்தால் 770 கோடி ரூபாய் திட்ட மதிப்பீட்டில் அமைக்கப்படும். மருந்து உற்பத்திக்குத் தேவையான அனைத்து அடிப்படை உட்கட்டமைப்பு

வசதிகளுடன் குறிப்பாக, கழிவுநீர் சுத்திகரிப்பு ஆலை, மூலப் பொருட்கள் சேகரிப்பு நிலையம், உலர் மற்றும் குளிரூட்டு நிலையம், நவீன ஆய்வக வசதிகள், கிடங்குகள், அவசரகால நடவடிக்கை மையம் உட்பட அனைத்து வசதிகளும் உள்ளடக்கியதாக இப்பூங்கா இருக்கும்.

2. சிப்காட் சிறுசேரி, நாவலூர் ஏரியினைத் தூர்வாரி ஆழப்படுத்துவதுடன், கரையினை உறுதிப்படுத்தி, நடைபாதை வசதி, சைக்கிள் பாதை வசதிகளுடன் பூந்தோட்டத்துடனான இயற்கைப் பூங்கா 50 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும். இதன்மூலம் சிப்காட் சிறுசேரி தகவல் தொழில்நுட்பப் பூங்காவில் பணிபுரியும் பணியாளர்களும் மற்றும் பொது மக்களும் பயனடைவர்.

3. கிருஷ்ணகிரி மாவட்டம், ஓசூர் சிப்காட் தொழிற்பூங்காவில் உள்ள தொழிற்சாலைகளுக்கு தங்குதடையின்றி தண்ணீர் வழங்கும்பொருட்டு, கெலவரப்பள்ளி அணைக்கட்டிலிருந்து நீரைப் பெற்று, அந்நீரை சுத்திகரித்து ஓசூர் சிப்காட் தொழிற்பூங்காவில் உள்ள சுமார் 355 தொழிற்சாலைகளுக்கு விநியோகிக்கப்படும். இதற்கென நாளொன்றுக்கு 20 மில்லியன் லிட்டர் கொள்திறன் கொண்ட மூன்றாம் நிலை சுத்திகரிப்பு நிலையம், 110 கோடி ரூபாய் திட்ட மதிப்பீட்டில் நிறுவப்படும்.

4. தமிழ்நாட்டில் புதிய தொழில் முதலீட்டை ஈர்க்கும் வகையில், சென்னைக்கு அருகில் சிப்காட் மாநல்லூர் தொழிற்பூங்காவில் மின்சார வாகனப் பூங்கா ஒன்று 148 கோடி ரூபாய் திட்ட மதிப்பீட்டில் உருவாக்கப்படும். இத்தொழிற்பூங்கா அனைத்து அடிப்படை வசதிகளுடனும், மின்சார வாகன உற்பத்திக்குத் தேவையான தொழில்நுட்ப ஆய்வு மையம், சோதனை மையம், கிடங்கு வசதி மற்றும் கனரக வாகனங்கள் நிறுத்தும் வசதிகள் ஆகியவற்றை உள்ளடக்கியதாக அமையும்.

5. சிப்காட் நிறுவனம் புதிதாக அமைக்கவுள்ள மாநல்லூர், செய்யாறு, மணப்பாறை, தேனி, மணக்குடி மற்றும் சக்கரக்கோட்டை ஆகிய தொழிற்பூங்காக்களில் ஆசிய வளர்ச்சி வங்கி மற்றும் வேளாண்மை ஊரக வளர்ச்சிக்கான தேசிய வங்கி (NABARD) நிதி உதவியுடன் 2,934 கோடி ரூபாய் திட்ட மதிப்பீட்டில் நவீன உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்படும்.

6. வணிகம் மற்றும் நிறுவன தகவல்களைச் சேமித்தல், மீட்டெடுத்தல், தகவல் தொழில்நுட்பப் பயன்பாடுகளைச்

செயல்படுத்துதல் ஆகிய பணிகளை மேற்கொள்ளும் தொழில் நிறுவனங்கள் அமையும் வகையில், ஸ்ரீபெரும்புதூர் வட்டத்தில் உள்ள நெமிலி மற்றும் மன்னூர் கிராமங்களில் சுமார் 150 ஏக்கர் நிலப்பரப்பில், 500 கோடி ரூபாய் திட்ட மதிப்பீட்டில், தரவு மைய பூங்கா ஒன்றினை டிட்கோ உருவாக்கும். இப்பூங்காவில் செயல்பாட்டுக்கு வரும் தொழில் நிறுவனங்கள்மூலம் சுமார் 3,500 புதிய வேலைவாய்ப்புகள் உருவாகும். நவீன யுகத்தின் பெரும் சொத்தாகக் கருதப்படும் தகவல் தரவுகளுக்கான தொழில் பூங்கா தமிழ்நாட்டில் அமைக்கப்படுவதன்மூலம், தகவல் தொழில்நுட்பத் துறையில் தமிழ்நாடு மேலும் முன்னேற்றம் அடைந்திடும் என்பதை இப்பேரவைக்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

(ஈ) சென்னையில் புத்தொழில் மற்றும் புத்தாக்க நகரம், கோயம்புத்தூர் வட்டம், கல்லப்பாளையத்தில் தனியார் தொழிற்பூங்கா அமைத்தல் மற்றும் மின்சார வாகன உபகரணங்கள் உற்பத்தி செய்யும் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு சிறப்பு மூலதன மானியம் வழங்குதல் குறித்த குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை தொடர்பான முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறைமூலம் நடப்பாண்டில் செயல்படுத்தப்படவிருக்கும் அறிவிப்புகளை இப்பேரவையில் வெளியிடுவதில் நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்.

1. புத்தாக்கங்கள் மற்றும் அறிவுசார் நிறுவனங்களின் (Innovation and Knowledge based firms) செயல்பாடுகளை ஆதரித்து, புத்தொழில்கள் உருவாக்கும் நோக்கத்துடன், உட்கட்டமைப்பு சேவைகள் மற்றும் வணிகச் சூழலுடன்கூடிய ஒரு புத்தொழில் மற்றும் புத்தாக்க நகரம் (Startup and Innovation City) சென்னையில் 350 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்படும்.

2. தமிழ்நாடு அரசின் பங்களிப்புடன் தனியார் தொழிற்பூங்கா உருவாக்கும் திட்டத்தின்கீழ், கோயம்புத்தூர் மாவட்டம், சூலூர் வட்டம், கல்லப்பாளையம் கிராமத்தில் 116.24 ஏக்கர் பரப்பளவில், 20 கோடியே 96 இலட்சம் ரூபாய் மதிப்பில், கொடிசியாமூலம் ஒரு புதிய தனியார் தொழிற்பூங்கா அமைக்கப்படும். இத்திட்டத்திற்கு அரசின் மானியமாக 10 கோடி ரூபாய் வழங்கப்படும்